முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2021 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

(Financial Reporting)

2021-03-20
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பல்வேறு காரணங்களுக்காக கணக்கீட்டில் நன்நெறி (ethics) மற்றும் நன்நெறி சார்ந்த நடத்தைகள் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றன. உலகளாவிய சூழலில் நன்நெறி சார்ந்த கணக்கீடானது மிகவும் முக்கியமானதாக மாறிவருவதுடன் கணக்காளர்கள் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் செயலாற்றுதல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கணக்கீட்டில் நன்நெறி ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

### வினா 02

பயனுள்ள நிதித் தகவல்களின் தரப் பண்புகள், நிதிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ள நிதித் தகவல்களுக்குப் பிரயோகிக்கப்படுகின்றன. இரண்டு அடிப்படைத் தரப் பண்புகள் காணப்படுவதுடன் நிதித் தகவல்கள் ஒப்பிடக்கூடியதாக, சரிபார்க்கக்கூடியதாக, சரியான நேரத்திலானவையாக மற்றும் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருப்பின் அதன் பயன்தரும் தன்மை அதிகரிக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நிதி அறிக்கையிடலின் எண்ணக்கருச் சட்டகத்திற்கேற்ப, இரண்டு (02) அடிப்படைத் தரப் பண்புகளை (fundamental qualitative characteristics) **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** ஒரு புதிய தொழிற்சாலைக் கட்டடத்தை 2019 யூன் 01 ஆந் திகதி நிருமாணிக்க ஆரம்பித்ததுடன் அது 2021 செப்ரெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தியடையும். 2020 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டின்போது புதிய கட்டடத்தின் நிருமாணத்திற்காக ரூபா 30 மில்லியன் பயன்படுத்தப்பட்டது. **PQR வங்கியிடமிருந்து** பெற்றுக்கொள்ளப்பட்ட கடன், முழுமையாக இந்த நிருமாணத் திற்காகப் பயன்படுத்தப்பட்டது. நிருமாணத்திற்காகச் செலவிடப்பட்ட மீதித் தொகையானது தனிச்சங்களின் விநியோகம் மற்றும் **ABC வங்கியிடமிருந்து** பெற்ற கடன் ஆகியவற்றிலிருந்து பயன்படுத்தப்பட்டது.

கடன்கள் மற்றும் தனிச்சங்களின் விநியோகம் தொடர்பான பின்வரும் மேலதிக தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | பெற்றுக் கொண்ட திகதி | வட்டி வீதம் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| **PQR வங்கி** | 01.04.2019 | 14 % | 15 மில்லியன் |
| **ABC வங்கி** | 01.04.2019 | 12 % | 10 மில்லியன் |
| தனிச்சங்கள்<br>(தனிச்சமொன்று ரூபா 100/-) | 01.04.2019 | 16 % | 10 மில்லியன் |

**PQR வங்கி** மற்றும் **ABC வங்கி** ஆகியவற்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கான வட்டி செலுத்தப்பட்ட போதிலும், 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் மூலதன மீள்கொடுப்பனவுகள் எதுவும் செய்யப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 23 – கடன்படுகைக் கிரய நியமத்தின்படி, 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கட்டடம் மீது மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்படுகைக் கிரயத்தைக் (borrowing cost) **கணிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

கீழ்வரும் தகவல்கள் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட தாஸ்** கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும் :

(1) ஆண்டின்போது ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்கு ரூபா 2 மில்லியன் கிரயம் கம்பனியால் செலவு செய்யப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவாக ஊழியர்களின் செயல்திறன் மேம்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

(2) **வரையறுக்கப்பட்ட தாஸ் கம்பனி** ஆண்டின்போது ஒரு புதிய பொருளை அபிவிருத்தி செய்ததுடன் அதன் வர்த்தகரீதியான செயற்பாட்டை 2019 யூன் 01 ஆந் திகதி ஆரம்பித்தது. புதிய பொருளை அபிவிருத்தி செய்வதற்கு (உருவாக்குவதற்கு) முன்னர், 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி ரூபா 3 மில்லியன் கிரயத்தைச் செலவு செய்து கம்பனியால் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) LKAS 38 – அருவச் சொத்துக்கள் நியமத்தின்படி, மேற்படி ஒவ்வொரு கிரயமும் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) அபிவிருத்திக் கிரயம் (development cost) ஒன்றை அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்வதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய இரண்டு (02) தேர்வு நிபந்தனைகளைக் (criteria) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

(a) நுகர்வோர் மின்சாதனக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட பெஸ்ட் டெக் கம்பனியின்** 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) நிதி ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியின் ஒரு வாடிக்கையாளர் கம்பனிப் பொருட்களின் மோசமான தரம் தொடர்பில், ரூபா 10 மில்லியன் இழப்பீடு கோரி கம்பனிக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அந்த வாடிக்கையாளருக்கு கம்பனி இழப்பீடு செலுத்துவதற்கான நிகழ்தகவு அதிகம் இருக்கிறது என கம்பனியின் வழக்கறிஞர்கள் நம்புகின்றனர். எவ்வாறாயினும், இழப்பீட்டுத் தொகை குறித்து நிச்சயமற்ற தன்மையை அவர்கள் கொண்டிருக்கின்றனர்.

(2) கொள்வனவு செய்த பின்னர் எந்தவொரு தயாரிப்புக் குறைபாட்டிற்கும் 6 மாத கால உத்தரவாதம் அளித்து, கம்பனி தனது பொருட்களை விற்பனை செய்கிறது. கடந்த கால அனுபவங்களின்படி, விற்பனை செய்யப்பட்ட 70% பொருட்களில் எவ்வித குறைபாடுகளும் இருக்காது எனவும் விற்பனை செய்யப்பட்ட 25% பொருட்களில் சிறிய பழுதுபார்ப்புகள் இருக்குமெனவும் விற்பனை செய்யப்பட்ட 5% பொருட்களில் பெரிய பழுதுபார்ப்புகள் இருக்குமெனவும் கம்பனி சுட்டிக் காட்டுகிறது. அனைத்துப் பொருட்களிலும் சிறிய பழுதுபார்ப்புகள் கண்டறியப்பட்டால், பழுதுபார்ப்புக் கிரயம் ரூபா 1,200,000/- ஆகவும் அனைத்துப் பொருட்களிலும் பெரிய பழுதுபார்ப்புகள் கண்டறியப்பட்டால், பழுதுபார்ப்புக் கிரயம் 4,800,000/- ஆகவும் இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் நியமத்தின்படி, 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட பெஸ்ட் டெக் கம்பனியின்** நிதிக் கூற்றுக்களில் மேற்படி ஒவ்வொரு நிகழ்வும் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட முடியும் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) நிதிக் கருவி என்பது ஒரு உரிமத்தின் நிதிச் சொத்திலும் வேறொரு உரிமத்தின் நிதிப் பொறுப்பு அல்லது உரிமையாண்மைக் கருவியிலும் அதிகரிப்பை ஏற்படுத்துகின்ற ஏதாவது ஒப்பந்தம் எனக் கருதப்படுகிறது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நிதிச் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்படும் மூன்று (03) உருப்படிகளையும் (items) நிதிப் பொறுப்பு களின் கீழ் உள்ளடக்கப்படும் இரண்டு (02) உருப்படிகளையும் **நிரற்படுத்துக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

(a) ***வரையறுக்கப்பட்ட ஷைன் டயில்ஸ் கம்பனி*** சுவர் ஓடுகளை (wall tiles) தயாரிக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனி 2020 செப்ரெம்பர் 30 ஆந் திகதி சீனாவிலிருந்து ஓடுகளைத் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை இறக்குமதி செய்தது. இயந்திரத்தின் FOB விலை ரூபா 3 மில்லியனாகும். இயந்திரத்தின் கப்பற் சரக்குக் கட்டணமும் (freight charges) கடல் காப்புறுதிக் கிரயமும் முறையே ரூபா 250,000/- மற்றும் ரூபா 50,000/- என்பனவாகும்.

இதற்கு மேலதிகமாக, பின்வரும் செலவுகளும் செய்யப்பட்டன :

(1) கம்பனியானது, இயந்திரத்தை இறக்குமதி செய்யும் வேளையில் இறக்குமதித் தீர்வையாக ரூபா 300,000/- ஐயும் மீளளிக்கப்படாத வரிகளாக ரூபா 30,000/- ஐயும் செலுத்தியது.

(2) பொறியியல் சேவைக் கிரயம் ரூபா 80,000/- ஆனது இயந்திரத்தை நிறுவுவதற்குச் செலவு செய்யப்பட்டது. மேலும், ரூபா 75,000/- கிரயமானது தள ஆயத்த வேலைகளுக்காகவும் பழைய இயந்திரத்தை கழற்றுவதற்காகவும் செலவிடப்பட்டது.

(3) இயந்திரத்தை நிறுவியதன் பின்னர், சோதனை ஓட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக உற்பத்திக் கிரயம் ரூபா 55,000/- செலவிடப்பட்டது.

(4) எதிர்கால இழப்புகள்/ சேதங்களுக்காக (losses/ damages) இயந்திரம் காப்புறுதி செய்யப்பட்ட துடன் அதற்கான வருடாந்த தவணைக் கட்டணம் ரூபா 50,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரண நியமத்தின்படி, ஆரம்ப ஏற்பிசைவில் (initial recognition) இயந்திரத்தின் கிரயத்தைக் **கணிக்குக.** (06 புள்ளிகள்)

(b) இலங்கை பிணைகள் சந்தையை ஒழுங்குபடுத்தும் நோக்கத்திற்காக பிணைகள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழு (Securities and Exchange Commission) தாபிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

பிணைகள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் நான்கு (04) கடமைகளை (duties) **நிரற்படுத்துக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான **வரையறுக்கப்பட்ட கமஹே (தனி.) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட கமஹே (தனி.) கம்பனி**
**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| மார்ச் 31 இல் | 2020 | 2019 |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 3,205 | 2,838 |
| திரள் தேய்மானம் | (1,090) | (810) |
| **முன்கொணரற் பெறுமதி** | **2,115** | **2,028** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 1,520 | 1,920 |
| வியாபார வருமதிகள் | 1,320 | 905 |
| காசும் காசுச் சமானங்களும் | 600 | 457 |
| | **3,440** | **3,282** |
| **மொத்தச் சொத்துக்கள் :** | **5,555** | **5,310** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 1,000 | 1,000 |
| கைக்கொள் இலாபம் | 1,560 | 820 |
| | **2,560** | **1,820** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 750 | 1,200 |
| | **750** | **1,200** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 1,675 | 1,590 |
| குறுங் காலக் கடன்கள் | 150 | 150 |
| கடன்கள் மீது செலுத்த வேண்டிய வட்டி | 200 | 100 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 220 | 450 |
| | **2,245** | **2,290** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **5,555** | **5,310** |

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினங்கள் ரூபா 110,000/-.

(2) மோட்டார் வாகனமொன்று 2019 ஏப்ரல் 01 இல் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் கிரயம் ரூபா 1,200,000/- ஆக இருந்ததுடன் 2019 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் ரூபா 650,000/- ஆகவும் இருந்தது. மோட்டார் வாகன விற்பனை மீதான இலாபம் ரூபா 600,000/- ஆகும்.

(3) ஆண்டிற்கான கடன்கள் மீதான வட்டிச் செலவினம் ரூபா 120,000/-.

(4) ஆண்டின்போது சாதாரண பங்குதாரர்களுக்கு இடைக்காலப் பங்கிலாபமாக ரூபா 200,000/- செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

<u>நேரில் முறையைப் பயன்படுத்தி,</u> 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட கமஹே (தனி.) கம்பனிக்காக** காசுப் பாய்வுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

கீழ்வரும் தகவல்கள் **சக்தி PLC** இன் 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான முற்றடக்க வருமானக் கூற்று, 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான நிதி நிலைக் கூற்றுக்கள் ஆகியவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

***முற்றடக்க வருமானக் கூற்றுக்களிலிருந்தான பிரித்தெடுப்பு*** *(ரூபா '000)*

| **முடிவடைந்த ஆண்டிற்கான** | **2020 மார்ச் 31** | **2019 மார்ச் 31** |
|---|---|---|
| விற்பனை | 300,100 | 275,000 |
| விற்பனைக் கிரயம் | 180,060 | 152,500 |
| மொத்த இலாபம் | 120,040 | 122,500 |
| வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் | 44,500 | 32,000 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 38,000 | 27,800 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 27,500 | 23,500 |

***நிதி நிலைக் கூற்றுக்கள்*** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல்** | **2020** | **2019** |
|---|---|---|
| **சொத்துக்கள் :** | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | 125,000 | 120,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 32,000 | 30,000 |
| வியாபார வருமதிகள் | 30,500 | 27,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 8,500 | 6,200 |
| | **71,000** | **63,200** |
| **மொத்தச் சொத்துக்கள் :** | **196,000** | **183,200** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் (9,000,000 சாதாரண பங்குகள்) | 90,000 | 90,000 |
| கைக்கொள் இலாபம் | 15,300 | 5,800 |
| | **105,300** | **95,800** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன் | 45,000 | 56,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 24,200 | 16,200 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 9,500 | 9,100 |
| அட்டுறு செலவினங்கள் | 12,000 | 6,100 |
| | **45,700** | **31,400** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **196,000** | **183,200** |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2020 மார்ச் 31 மற்றும் 2019 மார்ச் 31 இலான / முடிவடைந்த ஆண்டிற்கான மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, **சக்தி PLC** இன் பின்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம்

(iii) விரைவுச் சொத்துக்கள் விகிதம்

(iv) தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE)

(v) நெம்பு விகிதம்

(vi) பங்கொன்றிற்கான வருவாய் (06 புள்ளிகள்)

(b) மேலே கணிப்பிடப்பட்ட விகிதங்களின் அடிப்படையில் **சக்தி PLC** இன் செயலாற்றுகையைப் (performance) **பகுப்பாய்வு செய்க.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

## வினா 09

**அல்பா PLC** ஆனது 2020 சனவரி 01 இல் **பீற்றா PLC** இன் 80% சாதாரண பங்கு மூலதனத்தை ரூபா 85 மில்லியனுக்குக் கொள்வனவு செய்தது. அத்திகதியில் **பீற்றா PLC** இன் இனங்காணத்தக்க நிகரச் சொத்துக்களின் சீர் மதிப்பு (fair value) ரூபா 95 மில்லியனாக இருந்ததுடன் 2020 சனவரி 01 இல் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர் மதிப்பு ரூபா 25 மில்லியனாகவும் இருந்தது.

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **அல்பா PLC** மற்றும் **பீற்றா PLC** இன் முற்றடக்க வருமானக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**முற்றடக்க வருமானக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | **அல்பா PLC** | **பீற்றா PLC** |
|---|---|---|
| விற்பனை | 325,000 | 140,000 |
| விற்பனைக் கிரயம் | (180,000) | (60,000) |
| **மொத்த இலாபம்** | **145,000** | **80,000** |
| **பிற வருமானங்கள் :** | | |
| வாடகை வருமானம் | 600 | - |
| ஏனைய வருமானம் | 500 | 500 |
| **செலவினங்கள் :** | | |
| விநியோகச் செலவினங்கள் | (26,000) | (12,800) |
| நிருவாகச் செலவினங்கள் | (48,000) | (24,000) |
| நிதிச் செலவினங்கள் | (2,500) | (1,800) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 69,600 | 41,900 |
| வருமான வரி | (8,500) | (6,000) |
| ஆண்டிற்கான இலாபம் | 61,100 | 35,900 |
| பிற முற்றடக்க வருமானம் | - | - |
| **மொத்த முற்றடக்க வருமானம்** | **61,100** | **35,900** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) ஆண்டின்போது **அல்பா PLC** ஆனது கிரயத்தில் 25% இலாப எல்லை வைத்து **பீற்றா PLC** இற்கு ரூபா 6,000,000/- பெறுமதியான பொருட்களை விற்பனை செய்திருந்தது. அந்தப் பொருட்களில் $\frac{1}{3}$ பங்கு பொருட்கள் 2020 டிசெம்பர் 31 இல், **பீற்றா PLC** இன் வளாகத்தில் விற்பனை செய்யப்படாது இருப்பில் இருந்தன.

(2) 2020 அக்டோபர் 31 இல், **பீற்றா PLC** ஆனது ரூபா 5,000,000/- கிரயமான காணி ஒன்றை **அல்பா PLC** இற்கு ரூபா 5,500,000/- இற்கு விற்பனை செய்திருந்தது.

(3) **பீற்றா PLC** ஆனது களஞ்சியசாலையைப் பயன்படுத்துவதற்கான மாதாந்த வாடகையாக 50,000/- இனை **அல்பா PLC** இற்குச் செலுத்தியுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒன்றித்தலினால் ஏற்படும் நன்மதிப்பைக் (goodwill) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த முற்றடக்க வருமானக் கூற்றைத் **தயாரிக்குக.** (09 புள்ளிகள்)

(மொத்தம் 13 புள்ளிகள்)

## வினா 10

கீழுள்ள பரீட்சை மீதி 2020 மார்ச் 31 இலான **டயமன்ட் PLC** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது :

**டயமன்ட் PLC**

**2020 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (6,000,000 சாதாரண பங்குகள்) | | 60,000 |
| கைக்கொள் இலாபம் - 2019 ஏப்ரல் 01 இல் | | 19,300 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணியின் கிரயம் ரூபா 38 மில்லியன்) | 45,000 | |
| பொறி மற்றும் இயந்திரம் | 10,250 | |
| அலுவலக உபகரணம் | 6,300 | |
| **திரள் தேய்மானம் - 2019 ஏப்ரல் 01 இல் :** | | |
| கட்டடம் | | 4,500 |
| பொறி மற்றும் இயந்திரம் | | 3,700 |
| அலுவலக உபகரணம் | | 2,100 |
| தொக்கு – 2020 மார்ச் 31 இல் | 35,300 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 18,100 | 17,100 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 8,350 | |
| ஐயுறக்கடன் ஏற்பாடு - 2019 ஏப்ரல் 01 இல் | | 3,000 |
| முற்கொடுப்பனவுகள் | 6,000 | |
| செலுத்திய வருமான வரி | 4,200 | |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்குகள் | 6,500 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 205,000 | 281,000 |
| பிற வருமானம் | | 6,000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி – 2019 ஏப்ரல் 01 இல் | | 2,750 |
| நிருவாகச் செலவினங்கள் | 34,550 | |
| விநியோகச் செலவினங்கள் | 24,400 | |
| நிதிச் செலவினங்கள் | 2,400 | |
| வங்கிக் கடன் | | 2,500 |
| ஊழியர் நன்மைகள் (ஓய்வூதிய ஏற்பாடு) | | 4,400 |
| | **406,350** | **406,350** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2020 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி ரூபா 34,875,000/-.

(2) வியாபாரத்திற்கு ரூபா 500,000/- தருமதியாக இருந்த அதன் வாடிக்கையாளர்களில் ஒருவர் 2020 மே 20 ஆந் திகதி வங்குரோத்து நிலை (bankrupt) அடைந்தவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். இதனால் அவர் தர வேண்டிய தொகை அறவிட முடியாததாக மாறியுள்ளது. இது தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், 2020 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 10% ஐயுறவுக் கடன் ஏற்பாட்டைப் பேணத் தீர்மானிக்கப் பட்டது.

(3) நிதியாண்டு 2019/20 தொடர்பான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 400,000/- ஆனது கணக்கிற் கொள்ளப்படவில்லை என்பதுடன் முற்கொடுப்பனவுக் கணக்கானது 2020 நாட்காட்டி ஆண்டு முழுமைக்காகவும் செலுத்தப்பட்ட காப்புறுதிக் கொடுப்பனவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(4) 2018 ஏப்ரல் 01 இல் ரூபா 500,000/- இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் ஒன்றை கம்பனியானது 2020 மார்ச் 31 இல் ரூபா 350,000/- இற்கு விற்பனை செய்தது. விற்பனை மூலம் கிடைத்த காசு, காசேட்டில் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இயந்திரக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இவை தவிர இயந்திர விற்பனை தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(5) ஆதனம், பொறி மற்றும் இயந்திரங்கள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானப் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலங்கள் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 50 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | : | 04 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | : | 05 ஆண்டுகள் |

(6) 2020 மார்ச் 31 இல் கம்பனியானது சேத இழப்புச் சோதனை ஒன்றை நடத்தியதுடன் அந்தச் சோதனையின்போது, அலுவலக உபகரணத்தின் விற்பனைக் கிரயத்தைக் கழித்த பின்னரான சீர்மதிப்பு ரூபா 2,540,000/- ஆக இருந்தமை வெளிப்பட்டது. அலுவலக உபகரணப் பயன்பாட்டின் பெறுமதி ரூபா 2,800,000/- ஆக இருந்தது. சேத இழப்பு தொடர்பில் கணக்கேடுகளில் எவ்வித சீராக்கமும் செய்யப்படவில்லை.

(7) 2020 மார்ச் 31 இல், கம்பனி தனது காணியை ரூபா 40,000,000/- இற்கு மீள்மதிப்பீடு செய்ததுடன் அது தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(8) 2020 மார்ச் 31 இலுள்ள வங்கிக் கடன் மீதியில் அரைவாசி (½) ஆனது 2020/21 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

(9) 2018/19 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 2,750,000/- ஆக இருந்தது. இது 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்தப்பட்டதுடன், செலுத்தப்பட்ட தொகையானது செலுத்திய வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது. 2019/20 ஆம் ஆண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 3,300,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(10) கம்பனியின் பணிப்பாளர்கள் நிதிக் கூற்றுக்களைப் பிரசுரிப்பதற்காக 2020 யூன் 30 ஆந் திகதி அங்கீகரித்தனர்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவத்தில் **டயமன்ட் PLC** இற்காக பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று) (10 புள்ளிகள்)

(b) 2020 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (08 புள்ளிகள்)

(c) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று (03 புள்ளிகள்)

(d) 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் கூற்று. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |